**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.</u>**
**<u>அசல் வழக்கு எண்.101/2024</u>**

பெயர்–திரு.குப்புசாமி நாள்.09.01.2026

பி.வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பி.வா.சா.1 : வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

1.என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், தாவா சொத்து பூர்விகமாக எங்களுக்கு பாத்தியப்பட்டது. அதில் பிரதிவாதிகள் இடையூறு செய்வதால், வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 1–ம் பிரதிவாதி பூங்கொடி அவரது சொத்தை எந்த வருடம், யாரிடம் இருந்து கிரையம் வாங்கினார் என்றால், எனக்கு தெரியாது. தாவா சொத்தில் இருந்து 6, 7 கி.மி தொலைவில் பிரதிவாதியின் சொத்து உள்ளது. 1–ம் பிரதிவாதியின் சொத்தின் சர்வே எண்.1629. எனது சொத்தின் சர்வே எண்.1711/2. எனது சொத்திற்கு தமிழக அரசால் வழங்கப்பட்ட பட்டா, ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.7–ல் 1–ம் பிரதிவாதி சர்வே எண்.1629 பூமியைத்தான் கிரையம் பெற்றுள்ளார் என்றால், சரிதான். வா.சா.ஆ.7 ஆவணத்தின் அடிப்படையில்தான் பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். சர்வே எண்,1629–ல் தான் பிரதிவாதிகள் விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால், சரிதான். நான் கூறுவதுபோல், எனது பூமிக்கும் 1–ம் பிரதிவாதியின் பூமிக்கும் 6, 7 கி.மி தொலைவில் உள்ள நிலையில், 1–ம் பிரதிவாதி எனது சொத்தில் இடையூறு செய்ததாக சொல்வது உண்மையல்ல என்றால், சரியல்ல.

2.நான் எனது தாவா சொத்தில்தான் குடியிருக்கிறேன். 1–ம் பிரதிவாதி திருப்பூரில் குடியிருக்கிறார் என்றால், சரிதான். தாவா சொத்தில் 1–ம் பிரதிவாதிக்கு வீடு இல்லை என்றால், சரிதான். இதனால், 1–ம் பிரதிவாதி எனது சொத்தில் இடையூறு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றால், சரியல்ல. 1–ம் பிரதிவாதி அவருடைய கிரையப் பத்திரத்தின் படி பட்டா மாறுதல் பெற்று அனுபவித்து வருகிறார் என்றால், சரிதான். 1–ம் பிரதிவாதியின் கிரைய ஆவணத்தின் அடிப்படையில்தான் வருவாய் துறையில் மனு தாக்கல் செய்து, பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது என்றாலும், எவ்வித தவறான ஆவணங்களும் தாக்கல் செய்து பட்டா மாறுதல் பெறவில்லை என்றாலும்,

சரியல்ல. 1–ம் பிரதிவாதிக்கு எதிராக நான் எவ்வித பரிகாரமும் கேட்க உரிமையில்லை என்றால், சரியல்ல. 1–ம் பிரதிவாதியின் பரிகாரத்தைப் பொறுத்து எனது வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால், சரியல்ல.

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.01.09 16:40:05 +0530

District Munsif